# Plantation of 10,000 Palymyra Seeds

10,000 Palmyra seeds (Palm Seeds) were planted by Sacred Heart College (Autonomous), Tirupattur students on 23.09.2023 in the presence of **District Collector Bhaskara Pandian IAS , District Superintendent of Police, Albert John, IPS and Rev.Fr. Maria Antony Raj, Prinicipal, Rev.Dr. Shanmugam, Director, DEEDS** on the bank of **Rauthampatti lake**.

From August 24th to September 19th 2023, 30,000 palm seeds were planted by 1,264 students at the rate of 1,000 seeds each in the villages of Kethandapatti, Madrapalli, Pallaveli, Adiyur, Kunichi, Mottur, Nattam, Muthampatti, Sevvattur, Kasinayakambatti, Vengaipally, Periyakaram, Mookkanur, Panchayats and so on.









தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்




வேலூர் • ஞாயிறு • செப்டம்பர் 24, 2023 | சென்னை • வேலூர் • புதுச்சேரி • ஈரோடு • சேலம் • கோயம்புத்தூர் • திருச்சி • மதுரை • திருநெல்வேலி • நாகர்கோவில் | 14 பக்கம் • ₹7 • மலர் 73 • இதழ் 19



திருப்பத்தூர் துாய நெஞ்சக் கல்லுாரி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ராவுத்தம் பட்டி ஏரிக்கரையில் பனை விதைகள் நடும் பணியில் கலெக்டர் பாஸ்கரபாண்டியன் கலந்து கொண்டு விதைகளை நட்டார்.

# துாய நெஞ்சக் கல்லுாரி சார்பில் பனை விதைகள் நடும் பணி

**திருப்பத்துார், செப். 24**

திருப்பத்துார் துாய நெஞ்சக் கல்லுாரியில், 2019ம் ஆண்டு 'கிரீன் இனிசியேடிவ்' இயக்கம் தொடங்கப்பட்டது. இதன் நோக்கம், மாவட்ட கிராமப்புறம் மற்றும் ஏரிகளில் 4 ஆண்டுகளில் ஒரு லட்சம்

## கலெக்டர் பங்கேற்பு

பனை விதைகள் நடவு என்ற இலக்காகும். இதன் படி, 2019ம் ஆண்டு இப்பணிகள் தொடங்கியது.

இந்நிலையில் இந்த இலக்கின் நிறைவுப் பணியாக பத்தாயிரம் பனை விதைகளை ராவுத்தம்பட்டி ஏரிக்கரையில் விதைக்கும் பணி நேற்று நடந்தது. கல்லுாரி முதல்வர் மரிய ஆண்டனி ராஜ் தலைமை வகித்தார். இதில் கலெக்டர் பாஸ்கரபாண்டியன், எஸ்பி ஆல்பார்ட் ஜான் ஆகியோர் கலந்து கொண்டு விதைகளை நட்டனர்.

பேரில் சப் இன்ஸ்பெக்டர் முனீஸ்வரன் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகிறார்.



■ திருப்பத்தூர் மாவட்ட கிரீன் இனிஷியேடிவ் அமைப்பின் மூலம் நிகழ்வு கல்லூரி மாணவர்கள், கிராம மக்கள் மற்றும் பஞ்சாயத்து உதவியோடு மாவட்ட ஆட்சியர் தலைமையில் கிராமப்புறங்களில் 40 ஆயிரம் பனை விதைகளை நடவு செய்யும் பணி முடிக்கப்பட்டது.

## கிரீன் இனிஷியேடிவ் அமைப்பின் மூலம்

# கிராமப்புறங்களில் 40 ஆயிரம் பனை விதைகள் நடவு பணி நிறைவு

### மாவட்ட ஆட்சியர் பங்கேற்பு

திருப்பத்தூர், செப். 24-

திருப்பத்தூர் மாவட்ட கிரீன் இனிஷியேடிவ் அமைப்பின் மூலம் நிகழ்வு கல்லூரி மாணவர்கள், கிராம மக்கள் மற்றும் பஞ்சாயத்து உதவியோடு மாவட்ட ஆட்சியர் தலைமையில் கிராமப்புறங்களில் 40 ஆயிரம் பனை விதைகளை நடவு செய்யும் பணி முடிக்கப்பட்டது.

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி சார்பாக கிரீன் இனிஷியேடிவ் என்ற அமைப்பின் மூலம் திருப்பத்தூர் மாவட்ட கிராமப்புறங்களில் 40 ஆயிரம் பனை விதைகளை நடவு செய்ய இலக்காக நிர்ணயிக்கப்பட்டு கடந்த ஆகஸ்ட் 15 ஆம் தேதி பணி தொடங்கப்பட்டது

மேலும் கல்லூரி மாணவர்கள் , கிராம மக்கள் மற்றும் பஞ்சாயத்தினர் உதவியோடு திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள கிராமப்புறங்களில் தொடர்ந்து பனை விதை நடவு செய்யப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து இந்த முயற்சியின் நிறைவாக நேற்று 10,000 பனை விதைகளை திருப்பத்தூர் அடுத்த ஆதியூர் பஞ்சாயத்திற்கு உட்பட்ட ராவுத்தம்பட்டி ஏரிக்கரைகள் மாவட்ட ஆட்சியர் பாஸ்கர பாண்டியன் முன்னிலையில் 200க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்களால் நடவு செய்யப்பட்டது

இந்த பனை விதை நடவு செய்யும் பணியை பாராட்டிய மாவட்ட ஆட்சியர் பாஸ்கர பாண்டியன் பொதுமக்களிடம் ஆங்காங்கே மரக்கன்றுகளையும், விதைகளையும் நடவு செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.